# 14



# வஹியின் முக்கியத்துவம்



ஹாரிஸ்: அஸ்ஸலாமு அலைக்கும் பெரியவரே. உங்களுடன் சிறிது நேரம் உரையாடுவதற்கு அனுமதி தருவீர்களா?

பெரியவர்: வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு. ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்? தாராளமாகக் கதைக்கலாமே.

ஹாரிஸ்: வஹியைப் பற்றிக் கேட்டு அறிந்து வருமாறு எங்கள் ஆசிரியர் கூறியுள்ளார். அது பற்றி அறிந்து கொள்ளத்தான் வந்துள்ளோம்.

பெரியவர்: நல்லது. அமர்ந்து கொள்ளுங்கள்! உங்கள் சந்தேகங்களைக் கேளுங்கள்.

ஹாபிழ்: அறிவை புலனறிவு, பகுத்தறிவு என இரண்டாக வகுத்துக் கூறுவார்கள். இவ்விரண்டில் வஹியை எதில் உள்ளடக்கலாம்?

பெரியவர்: புலனறிவுக்கும், பகுத்தறிவுக்கும் அப்பால் முதன்மையான அறிவொன்றாக வஹி அமைந்துள்ளது. முதலிரண்டும் மனிதனில் பொதிந்துள்ளதோடு அவை மனிதன் வளர வளரக் கூர்மையடைகின்றன. ஆனால் வஹி அப்படிப்பட்டதல்ல. உண்மையில் அது முதலிரு அறிவையும் நெறிப்படுத்தி, மனிதனை சத்தியத்தின்பால் வழிநடத்துகின்றது.

ஹிஷாம்: அதைச் சற்று விளக்கமாகக் கூறுவீர்களா?

பெரியவர்: எல்லா உயிரினங்களுக்கும் புலன்களை அடிப்படையாகக் கொண்ட, அவற்றின் தேவைக்கு ஏற்ப மட்டுப்படுத்தப்பட்ட அறிவு வழங்கப்பட்டுள்ளது. மனிதன் இப்புலனறிவுடன் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு பகுத்தறிவையும் பெற்றுள்ளான். பகுத்தறிவைப் பெற்ற மனிதன் நேரிய வழியைத் தேர்ந்தெடுப்பதற்கு உதவியாகவே வஹியுடைய அறிவு வழங்கப்படுகிறது. இது ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியாக வழங்கப்படுவதில்லை. மாறாக மனிதர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் நபிமார்களுக்கு வழங்கப்பட்டு, அவர்கள் அதை எத்தி வைப்பதன் மூலம் ஏனைய மனிதர்களைச் சென்றடைகின்றது.

ஹிஷாம்: வஹி என்ற சொல்லின் கருத்தைத் தெளிவு படுத்துவீர்களா?

பெரியவர்: மொழி ரீதியாக வஹி என்ற சொல், சமிக்ஞை, உதிப்பு, மனதில் எழுதல், தூது சொல்லல், இரகசியமாகப் பேசுதல் என்று பொருள் தரும்.

அல்குர்ஆனும் வஹி என்ற சொல்லைப் பல கருத்துக்களில் பயன்படுத் தியுள்ளது. 'மற்றவர்கள் அறியாத முறையில் தொடர்பு கொள்பவர் மாத்திரம் புரியும்படி ஒரு செய்தியை மிக வேகமாகவும், மிக இரகசியமாகவும் பரிவர்த்தனை செய்வது என்றும், பிறர் அறியாத விதத்தில் மிக இரகசியமாகவும் மிக வேகமாகவும் அல்லாஹ்விடமிருந்து அவனது தூதர்களுக்கு அருளப்படும் அல்லாஹ்வின் பேச்சு' எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஹிஷாம்: வஹியை வஹி மத்லுவ்வு என்றும் வஹி கைரு மத்லுவ்வு என்றும் இரண்டாகப் பிரித்துக் கூறுவார்களே. அது பற்றியும் சிறிது கூறுவீர்களா?

பெரியவர்: **வஹி மத்லுவ்வு** என்பது அல்லாஹ் ஜிப்ரீல் (அலை) மூலமாக ரஸூல்மார்களுக்கு ஓதிக் காண்பித்த வஹியாகும். ரஸூல்மார்கள் அதனை அப்படியே மக்களுக்கு ஓதிக்காட்டுவர். மக்கள் அதனைத் தமது தேவைக்கேற்ப ஒலி வடிவிலோ அல்லது வரிவடிவிலோ பாதுகாத்துக் கொள்வார்கள். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு அல்குர்ஆனாகும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்ட இது, மனனத்திலும் எழுத்திலும் இன்றுவரை அப்படியே பாது காக்கப்பட்டு வருகிறது. இது ஏனைய வேதங்களுக்கில்லாத ஒரு சிறப்பம்சமாகும்.

ஹாமித்: வஹி கைரு மத்லுவ்வு என்றால் என்ன?

பெரியவர்: **வஹி கைரு மத்லுவ்வு** என்பதன் கருத்து ஓதிக் காண்பிக்கப்படாத வஹி என்பதாகும். இவை பல்வேறு நிலைகளில் இறை தூதர்களுக்குக் கிடைக்கப் பெற்றன.

ஹாமித்: அவற்றுக்கான உதாரணங்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டுவீர்களா?

பெரியவர்: இப்றாஹீம் (அலை) அவர்கள் தனது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை குர்பான் செய்வதாக கனவு கண்டார்கள். (37:102) அல்லவா? அவ்வாறான உண்மைக் கனவுகள் இதில் அடங்கும். அது போன்றே மூஸா (அலை) அவர்கள் தூர்ஸினா மலைப் பக்கமாகச் சென்றபோது ஓர் அசரீரி கேட் டதல்லவா? அல்லாஹ் அவர்களுடன் (அசரீரியாக) உரையாடினான். (7:143) (20:11-13) இதுவும் அதிலடங்கும். ஸகரிய்யா (அலை) அவர்கள் சமிக்ஞைகள் மூலம் அல்லாஹ்வைத் தொழவும், புகழவும் அவருடைய சமூகத்துக்கு கற்றுக் கொடுத்தார்கள். (19:11) என்று அல்குர்ஆன் கூறுகின்றது. இதுவும் அதிலடங்கும். இது போலவே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீஸ்களும் வஹி கைரு மத்லுவ்வு என்றே கொள்ளப்படுகின்றன.

ஹுதைபா: வஹியின் முக்கியத்துவத்தை சற்று விளக்குவீர்களா?

பெரியவர்: இதுவரை கூறப்பட்டவை மனிதன் நேர்வழி பெறுவதற்கு வஹி அறிவு தேவை என்பதை உங்களுக்கு உணர்த்தியிருக்கும். அவை தவிர வேறு

காரணங்களையும் முன்வைக்கலாம். அல்லாஹ் மனிதனைச் சோதிப்பதற்காக மனோ இச்சை என்ற தூண்டுதலை அவனில் வைத்துள்ளான். மனோ இச்சை மனிதனது பகுத்தறிவை அடக்கி நன்மை தீமை பற்றி சிந்திக்க விடாமல் உலக இன்பங்களின் பால் அவனை இழுத்துச் செல்ல முயற்சிக்கும். இச்சந்தர்ப்பத்தில் வஹியறிவு மனிதனுக்கு நன்மை - தீமை, சரி - பிழை பற்றிய தெளிவை முன்வைக்கின்றது. அதை விசுவாசித்து நடக்கும் மனிதன், படிப்படியாக மனோ இச்சையை வெற்றி கொள்கின்றான்.

மேலும் பிரபஞ்சத்தில் பல படைப்புகள் காணப்படுகின்றன. அவற்றுள் அதிகமானவை மனிதனின் புலன்களால் அறிய முடியாதவை. ஏனெனில் மனிதனது புலனறிவு வரையறுக்கப்பட்டது. சில விலங்குகள் மனிதனைவிட அதிக புலனறிவைப் பெற்றுள்ளன என்ற விஞ்ஞானிகளின் கூற்று இதற்குச் சிறந்த ஆதாரமாகும். மனிதனது புலன்களால் அறிய முடியாத பல உண்மைகளை வஹி விளக்குகிறது. எனினும் பலர் புலனறிவில் மாத்திரம் நம்பிக்கை வைத்து வஹியறிவு கூறும் உண்மைகளை நிராகரிக்கின்றனர். இது மிகவும் அபத்தமானதாகும். இத்தகைய மனிதர்கள், தமது புலன்களால் புரியமுடியவில்லை என்பதற்காக பூமி தட்டையானது என்று நம்பியதுடன் அது உருண்டையானது எனக் கூறிய விஞ்ஞானிகளைக் கொலை செய்யவும் முயன்றுள்ளனர்.

பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் மனிதன் அல்லாஹ்வுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையிலான தொடர்பை அறிவதற்கு வஹியே வழிகாட்டியாக அமைகின்றது.

ஹிஷாம்: பெரியவரே! மனிதனது புலனறிவால் மாத்திரம் அறிய முடியாத சில விடயங்களைக் கூற முடியுமா?

பெரியவர்: மனிதனது உள்ளத்தில் தோன்றுகின்ற சில அடிப்படையான வினாக்களுக்குக் கூட புலனறிவாலோ அல்லது பகுத்தறிவாலோ மாத்திரம் சரியான பதிலைக் கூற முடியாது. அவ்வாறு பதில் கூற முயன்ற மனிதன்தான் சிலைகளைக் கடவுள் என்றான். கடவுளே இல்லை என்றான். மனிதன் குரங்கில் இருந்து தோன்றியவன் என்றான்.

ஹுதைபா: மனிதனது உள்ளத்தில் தோன்றுகின்ற அடிப்படையான வினாக்கள் எவை என்று கூற முடியுமா?

பெரியவர்: நான் யார்?

எங்கிருந்து வந்தேன்?

எங்கே செல்கிறேன்?

எனது பிறப்பின் நோக்கம் என்ன?

இவையே அவ்வினாக்களாகும். அவற்றுக்கு வஹியின் உதவியின்றி புலனறிவு, பகுத்தறிவு ஆகிய இரண்டினால் மாத்திரம் ஒருபோதும்

திட்டவட்டமான பதிலைக்கூற முடியாது. பதில் சரியாகக் கிடைக்காவிட்டால் மனிதன் தவறான வழியிலேயே சென்று கொண்டிருப்பான். இறைவனை மறுக்கும் நாத்திகர்களும், மறுமையை மறுக்கும் சடவாதிகளும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாவர்.

ஹாரிஸ்: பெரியாரே இவ்வளவு நேரமும் எங்களுடனிருந்து எமது சந்தேகங்களுக்குத் தெளிவான விளக்கங்களைத் தந்த உங்களுக்கு அல்லாஹ் அருள் புரிவானாக என்று பிரார்த்திப்பதோடு எங்களது உளப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றோம். ஜஸாக்கல்லாஹு ஹைரன் கஸீரா.

பெரியவர்: மாணவர்களே தேடிப்படிக்க முன்வந்த உங்களுக்கும் அல்லாஹ் நல்லறிவை விருத்தி செய்வானாக.

**பயிற்சி**

1. வஹியின் பிரதான பிரிவுகள் யாவை? உதாரணங்களுடன் விளக்குக.
2. வஹி அருளப்படும் வழிமுறைகள் யாவை?
3. வஹி அருளப்படுவதன் நோக்கங்களை எடுத்துக்காட்டுக.
4. புலனறிவு, பகுத்தறிவு ஆகிய இரண்டையும் விட வஹி அறிவு உயர்வானது என்பதை எவ்வாறு விளக்கிக் காட்டுவீர்?